பக்கங்கள் ஆறு

விலை ரூபா 5.00

# வலம்புரி
VALAMPURI

லாலாசோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
ஜீவா
பல்பொருள் வாணிபம்
நெல்லியடி பஜார்
நெல்லியடி
லாலாசோப் அச்சுவேலி
(கி 1045)

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 04 செவ்வாய்க்கிழமை (19-12-2000) தொ. பேசி 3378 ஒலி: 365

## ★ பாரிஸ் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில்

# புலிகள் நிபந்தனை விதித்திராவிடில்

# அரசு அவர்களுடன் பேசியிருக்கும்!

## உலகத் தலைவர் மத்தியில் ஜனாதிபதி

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எந்தவொரு நிபந்தனையும் விதிக்காமல் இருந்திருந்தால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகவும்; அத்தகையதொரு சமாதானப் பேச்சுவார்த்தைக்கான கதவுகள் விடுதலைப் புலிகளுக்காகத் திறந்திருக்குமெனவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பரிஸ் மாநாட்டிற்கு தலைமைவகித்துப் பேசும் போது தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் தலைநகர்பரிஸில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நேற்று காலை ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் ஆரம்பமானது.

இக் கூட்டத்தில், 25க்கும் மேற்பட்ட அங்கத்துவ நாடுகள் கலந்து கொண்டன.

இக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

அரசாங்கம் விடுதலைப்புலிகளைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்து வருவதற்கு நோர்வே அரசு பிரயத்தனம் செய்தபோதும் அவர்கள் ஒரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அன்பு வாசகர்களே!

வணக்கம்.

நாளை 20-ந் திகதி உங்கள் வலம்புரிக்கு ஒரு வயது. நீங்கள் தூக்கிவளர்த்த வலம்புரி ஓராண்டை நாளைய தினம் பூர்த்தி செய்கிறது. அத்தினத்தில் 'முதலாவது ஆண்டு சிறப்பு மலர்' 36க்கும் மேற்பட்ட பக்கங்களில் வெளிவருகிறது. மதப்பெரியோர்கள், அறிஞர்கள் ஆன்றோர்களின் ஆக்கங்களைத் தாங்கி வரும் உங்கள் வலம்புரியை வழமையான ஐந்து ரூபா விலையிலேயே பெற்றுக்கொள்ள முந்திவிடுங்கள்.

அதுமட்டுமல்ல எத்தனையோ இடுக்கண்களை, வஞ்சகச் செயல்களை உடைத்தெறிந்து ஓராண்டைப் பூர்த்திசெய்யும் வலம்புரியின் ஆண்டு நிறைவு விழா நாளை மாலை 2 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும்.

அவ்விழா உங்களுடையது. உங்கள் வலம்புரியினுடையது. அதில் உங்கள் எல்லோரையும் கலந்து சிறப்பிக்குமாறு இருகரம் கூப்பி அழைக்கின்றோம். (அழைப்பிதழ் 6-ம் பக்கத்தில்)

வருக! வருக! வருக!

வலம்புரிக் குடும்பம்

# விகாரைகளை மையமாக வைத்து படைக்கு ஆட்சேர்ப்பு இடம்பெறும்

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்திற்கு தற்போது நிலவும் ஆள் பற்றாக்குறைவு காரணமாக விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு முடியாமல் உள்ளது. இதனால் பௌத்த விகாரைகளை மையமாகக் கொண்டு அவர்களின் உதவியுடன் இராணுவத்திற்கு ஆள்சேர்ப்பதற்கு அரசு நடவடிக்கை

(6ஆம்பக்கம் பார்க்க)

## அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்க

# ஐ.தே.கட்சியின் முக்கிய பிரமுகர்கள்

# மூவர் இலண்டன் பயணமாவர்

## 400 தபால் பொதிகள், மருந்துப் பொருட்களுடன் ஐ.சி.ஆர்.சி. கப்பல் வரும்

(திருமலை)

கோல்ட்' என்ற கப்பல்

## ஐ.சி.ஆர்.சி. கப்பல் வரும்

(திருமலை)

யாழ். குடாநாட்டு வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்துப் பொருட்களுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் 'ஜெயா கோல்ட்' என்ற கப்பல் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கப்பல் 13 மெற்றிக்

(6ம் பக்கம் பார்க்க)

## இளம்பெண் கடத்தல் நாயன்மார்கட்டில்சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நாயன்மார் வீதியை வசிப்பிடமாகக்கொண்ட 16வயது இளம் பெண் ஒருவர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளதாக பெண்ணின் பெற்றோர் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளனர்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

கடந்த 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமைஇரவுஉணவு சாப்பிட்டபின் சுமார் 7.30 மணியளவில் நடராஜா கஜேந்தினி என்பவர் கடத்தப்பட்டதாகவும், இது தொ

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அங்காடி வியாபாரிகளுக்கு இடம் ஒதுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நத்தார்பண்டிகை, மற்றும் புதுவருடக் கொண்டாட்டங்களை அடுத்து யாழ்நகரில் அங்காடி வியாபாரிகளுக்கு வசதியாக புல்லுக் குளத்தின் பின்பகுதியில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று நடைபெற்றபோது, அக்கூட்டத்தில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ் நகரின் மையப் பகுதியில் அங்காடி வியாபாரிகள்

(6-ம்பக்கம் பார்க்க)

## ...குழுவா இலண்டன் பயணமாவர்

[கொழும்பு]

ஐக்கிய தேசியக்கட்சியின் உயர்மட்ட அரசியல் குழுவொன்று இலண்டன் பயணமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலண்டன் செல்லும்இந்த உயர்மட்ட அரசியல் குழு அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து இனப்பிரச்சினை தொடர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மதில் வீழ்ந்து சிறுவன் பலி

(யாழ்ப்பாணம்)

மதில் இடிந்து வீழ்ந்ததில் சிறுவன் ஒருவன் பலியானசம்பவம் நேற்று பண்டத்தரிப்பில் இடம் பெற்றது.

செல்வநாயகம் நிலான் [வயது-8] என்ற சிறுவனே மதில் இடிந்து வீழ்ந்ததில் பரிதாபமாகப் பலியானான். [ந]

## குருநகர்க் கடலில் மீன்பிடிக்க அனுமதி

(வடமராட்சி கிழக்கு)

குருநகர் பகுதியில் கடற்றொழில் செய்வதற்கு நேற்று முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காலை 7 மணிமுதல் முற்பகல் 11 00 மணிவரை கடற்றொழிலுக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டதாக அறியப்படுகிறது

பாஷையூர் பகுதியில் ஏற்

→6ஆம் பக்கம் பார்க்க

# யுத்தகளத்தில் புலிகளை வெல்ல விசேட படைப்பிரிவு உருவாகுது!

## 3வருடத்தில்வெற்றி பிரதமர் ஆருடம்

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை தீவிரப்படுத்தி அவர்களை தோல்வியடையச்செய்து யுத்தத்தைமுடிவுக்கு கொண்டு வருவதற்கு விசேட பயிற்சி பெற்ற புதியபடைப்பிரிவொன்று உருவாக்கப்டுவதாக பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

நேற்றுகொழும்பில் இடம்பெற்ற வைபவமொன்றில் பேசுகையிலேயே அவர்மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர்அங்கு தொடர்ந்துபேசுகையில் நவீனகட்டமைப்பு

(6ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்


**தவறிவிட்டது**

யோகராஜா யோகசீலன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை [இல 830100300V] விஷேடஅடையாள அட்டை [இல 0902011251] என்பன கச்சேரிக்கும் நந்தாவில் அம்மன் கோவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைத்து உதவும். சன்மானம் வழங்கப்படும். செ.இலட்சுமிகாந்தன், குட்செட் வீதி, கோண்டாவில். C/112


# யாழ்-குடாநாட்டில் நெற் செய்கை இம்முறை வீழ்ச்சி மழை இன்மையும் காரணமாம்

## உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ் குடாநாட்டில் பெரும் போக நெற்செய்கை 9 ஆயிரத்து 688 ஹெக்டேயரில் செய்யப்படும் என எதிர் பார்க்கப்பட்ட போதிலும் கூட 5 ஆயிரத்து 469 ஹெக்டேயரில் மட்டுமே நெற் பயிர்ச் செய்கை செய்யப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் க.சின்னத்துரை நேற்று முன் தினம் அரச செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாய ஒருக்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் உட்பட பிரதேச செயலர்கள், கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எஸ்.சுந்தரேசன் ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

இக் கூட்டத்தில் விவசாயத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் தொடர்ந்து குறிப்பிடுகையில்.

பெரும்போக நெற்பயிர்ச் செய்கை இம்முறை திருப்திகரமாக இருக்கவில்லை எனவும் போதிய மழை இன்மையில் பயிர்கள் வாடி வதங்குகின்றன என்றும் குறிப்பிட்டார்.

அதன் காரணமாக பல இடங்களில் விவசாயிகள் கிணறுகள், குளங்களில் இருந்து நீர் இறைத்து வருவதாகவும்- குடாநாட்டின் மொத்த நெல் தேவையை இவ் வருட நெற்செய்கை பூர்த்தி செய்ய மாட்டாது எனவும் தெரிவித்தார்.

கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எஸ்.சுந்தரேசன் அங்கு குறிப்பிடுகையில், குடாநாட்டு விவசாயிகளுக்குத் தேவையான உரவகைகள் போதியளவு கையிருப்பில் இருப்பதாகவும், மேலும் அடுத்து வரவுள்ள கப்பலில் 250 மெற்றிக் தொன் அமோனியம், 100 மெற்றிக் தொன் பி.ஒன்று மற்றும் 500 மெற்றிக் தொன் யூரியாவும் கொண்டு வரப்படவுள்ளது எனவும் கூறினார்.

அத்துடன், உரும்பிராயில் 40 ஆயிரம் தென்னம்பிள்ளை நாற்றுக்களை உற்பத்தி செய்யும் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகவும் உதவி ஆணையாளர் தெரிவித்தார். (க-77-12)

## புகையிலைச் செய்கை

(மல்லாகம்)

சுன்னாகம், இணுவில், உடுவில் பகுதி விவசாயிகள் புகையிலைச் செய்கைக்கான முன் முயற்சிகளில் இறங்கியுள்ளனர். (உ-ப-14)

## ஒலி பெருக்கி அன்பளிப்பு

(நல்லூர்)

ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்துக்கு அப் பகுதியின் அடியார்களால் ஒலிபெருக்கிச் சாதனங்கள் அன்பளிப்பாக வழங்கப் பெற்றுள்ளன. விசேட தினங்களில் இதன் மூலம் பக்தியைப் பெருக்கும் வகையிலான பாடல்கள் ஒலிபரப்பப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-103)

## ஆலயவீதி துப்புரவு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பாலாவோடை குறிஞ்சாக்குழி முத்துமாரி அம்பாள் ஆலய வீதி, அப் பகுதி பொது மக்களால்சிரமதான பணிமூலம்சீர் செய்யப் பட்டுள்ளது.

மேற்படி சிரமதானப்பணி ஜே/43 கிராமசேவை அலுவலர் செல்வி. சு. பாலாம்பிகை தலைமையில் நடைபெற்றது. (ச)

## கற்கை நெறி ஆரம்பம்

(மல்லகாம்)

யாழ்.விவசாயக் கல்வி நிறுவனத்தில் ஒருவருட விவசாய டிப்ளோமா கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சி நெறியைப் பயில விரும்பும் மாணவர்கள் நிறுவனக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு பூரண விபரங்களைப் பெறலாம் என அதிபர் த. குகதாசன் தெரிவித்துள்ளார். (ச-ப-14)

## இன்று ஒளிவிழா

(மந்திகை)

பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபையின் பாலர் பாடசாலையும், திருமறைப் பாடசாலையும் இணைந்து நடத்தும் ஒளிவிழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு மேற்படி திருச்சபையில் அருட்திரு ஏ.எஸ். சதீஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (செ-23)

## திருடர்கள் சூறையாட்டம் வீடுகள் வெறுந்தோற்றம்

(ஈச்சமோட்டை)

திருட்டுச் செயல்களில் ஈடுபடுவோர் தமது திருட்டுத் தொழிலைச் செய்வதற்கு முன்னர் அதற்குரிய முன்னேற்பாடுகளைச் செய்து விடுகின்றனர்.

அதாவது வீட்டு வளவினுள் நுழைவதற்கு வசதியாக வீட்டுக் கேற்றினைக் கழற்றிச் சென்று விடுகின்றனர். பின்னர் வீட்டு ஓடு, சீற், கதவு, யன்னல் என்பவற்றையும் திருடி வீட்டினுள் உள்ள பொருட்களையும் சூறையாடிச் சென்று விடுகின்றனர்.

இதன் காரணமாக வீட்டுக் கட்டடம் பரிதாப கரமான தோற்றத்துடன் காட்சியளிப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. (செ-59)

## சூழல் மாசுபடுதலுக்கு துணைபுரியும் முன்னாள் யா.மாநகரசபைக்கட்டடம்

(ஈச்சமோட்டை)

பழைய யாழ். மாநகர சபைக் கட்டடம் யாழ் நகரின் குப்பைத் தொட்டியாக மாறி வருவதையிட்டு பொதுமக்கள் பலரும் கவலை வெளியிட்டுள்ளனர்.

நகரின் வெவ்வேறு இடங்களில் சேரும் குப்பை கூழங்களைச் சேகரிப் போர் இப் பகுதிகளில் அவற்றைக் கொட்டி விடுவதாலும் கொள்கலங்களில் மாடுகள் கொல்லப்பட்டபின் அவற்றின் எலும்புகள் இப்பகுதியில் போடப்படுவதாலும் பெரும் துர்நாற்றத்தையும் அசிங்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அழகாகவும் சுத்தமாகவும் இருக்க வேண்டிய யாழ் நகரின் இப்பகுதி அசிங்கமாகவும், துர்நாற்றம் வீசும் இடமாகவும் காணப்படுகின்றது

கடந்த கால போர் நடவடிக்கையினால் தகர்க்கப் பட்ட இக்கட்டடப் பகுதி தற்போது அநாதரவாகவும் அசுத்தமாகவும் காணப்படுவது பெரும் வேதனைக்குரியதே.

இதைச் கருத்தில் கொண்டு யாழ் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் உரிய நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அத்துடன் இப்பகுதியில் அதிகளவு பற்றைகள் காடுகள் போல் வளர்ந்திருப்பதால் இது நுளம்பு பெருக்கத்திற்கும் வாய்ப்பளிக்கும் இடமாகவும் காணப்படுவதாக பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (உ-59)

## யாழ். குடாநாட்டில் மரக்கறி விதைதடுப்பாடு நீக்க புதிய வழிமுறை

(தென்மராட்சி)

யாழ். குடாநாட்டில் நிலவி வரும் மரக்கறி விதைகளுக்கான தட்டுப்பாட்டினை நீக்கும் பொருட்டு திருநெல்வேலி விவசாய பயிற்சிப் பாடசாலையில் விதைகள் உற்பத்தித் திட்டம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கான ஏற்பாட்டை யாழ். மாவட்ட அரச அதிபர் க சண்முகநாதன்மேற்கொண்டுள்ளார்.

இதன் பிரகாரம் அகில உலக செயலர் நிறுவனம் பட்டினிக்கு எதிரான நிறுவனம் விவசாயத் திணைக்களம், யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம், கமநல சேவைகள் திணைக்களம், மற்றும் அகதிகள் புனர் வாழ்வு நிறுவனம் ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்து விதைகள் உருவாக்கும் திட்டத்தினைச் செயற்படுத்துவர்.

இத்திட்டத்திற்கான நிதியுதவியை யாழ். அரச அதிபர் வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும், (க-77-12)

## வயல்களுக்கு நீர்ப்பாய்ச்சல்

(துன்னாலை)

பருவமழை போதாமையினால், நெற் செய்கையாளர்கள் தமது வயல் நிலங்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் நீர் பாய்ச்சி வருகின்றனர். (உ-41)

## சமுர்த்தி நியமனம்

(சங்கானை)

சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட 19 சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனக்கடிதங்கள அண்மையில் சங்கானைப் பிரதேசசெயலகத்தில் வைத்து வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் மற்றும் பிரதேசசெயலர் முன்நிலையில் வழங்கப்பட்டன. (உ-ப-16)

## பாடநூல் வந்து சேரவில்லை

(செம்பியன்பற்று)

அண்மையில், கல்வி அமைச்சினால் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பாட நூல்களில் பத்தாம் தரத்திற்கான வணிகக் கல்வியும் கணக்கீடும் பாடநூல் வந்து சேரவில்லை என தெரியவந்துள்ளது. (உ-43)

## பரீட்சைப் பெறுபேறுகள் வீழ்ச்சி

(இணுவில்)

இவ்வருடம் வெளியான க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள், தென்மராட்சிப் பகுதி பாடசாலைகளில் மிகவும் வீழ்ச்சி கண்டிருப்பதாக சம்பந்தப்பட்ட வலய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சிப் பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலை மற்றும் அதனால்இடம் பெற்ற இடப்பெயர்வுகளே இதற்குக் காரணம்எனக்கூறப் படுகிறது. (உ-49)

## 25 சமுர்த்தி ஊக்குவிப்பாளருக்கு நியமனம்

[யாழ்ப்பாணம்]

வடமராட்சி கிழக்கு உப செயலகத்தில் வைத்து 25 சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பருத்தித்துறைப் பிரதேச சபையின் உப தலைவர் பரஞ்சோதி ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது

மேற்படி நிகழ்வில் மருதங்கேணிப் பிரதேச செயலர் எஸ்.வேலாயுதபிள்ளை உட்பட பலர் கலந்து கொண்டனர். [ச]

## வீதி திருத்தம்

(நல்லூர்)

நல்லூர்ப் பிரதேச சபையின் கொக்குவில் உப-பணிமனையின் பகுதியிலிருந்து யாழ் செல்லும் பிறவுண்வீதி செப்பனிடப்பட்டுள்ளது.

தொழில் நுட்பக் கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களும், பொது மக்களும் இவ் வீதி திருத்தம் செய்யப்பட்டதால் பெரிதும் பயனடைந்துள்ளனர். (உ-103)

## வீடுகள் ஒப்படைப்பு

(அச்சுவேலி)

இவ்வருட முற்பகுதியில் இடம்பெறறபோர் நடவடிக்கைகள் காரணமாக இராணுவத்தினரால் பயன்படுத்தப் பட்டு வந்தசில வீடுகள் அதன் உரிமையாளர்களிடம் மீண்டும் கையளிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் சந்திக்கு அருகாக பிரதான வீதிக்கு கிழக்காக அமைந்திருந்த சில வீடுகளே இவ்வாறு மீண்டும் உரியவர்களிடம் அப்பகுதிக்கான கிராமசேவகர் முன்னிலையில் மீண்டும் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் வேறு பகுதியில் தற்காலிகமாக வசித்து வந்த இக் குடியிருப்பாளர்கள் தற்போது தமது வீடுகளில் வாழ்க்கை நடத்தக் கூடிய ஏது நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (உ-14)


வெளிவந்து விட்டது!

திருமறைக் கலாமன்றத்தின் வெளியீடான

**"குடிலின் கானங்கள்"**

(கிறிஸ்மஸ் பாடல் தொகுப்பு)

**விலை ரூபா 150.**

மன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொதுச் செயலாளர்,
திருமறைக் கலாமன்றம்.
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(கி/ 1120)



**நியூ சிற்றி ரேடேர்ஸ்**

ரீவி, வீடியோ, டெக், CDகள், ரேடியோ, கசற்ரெக்கோடர், அன்ரனா, பூஸ்ரர், வயர், சிற்றிசன் சீக்கோ கசியோ, சுவர், கை மணிக்கூடுகள், ரேடியோ, ரீவி உதிரிப்பாகங்கள் (IC) ஸ்ரபிளேசர்கள், பற்றி சார்ஜர்கள், ரைஸ் குக்கர், சீலிங், மேசை விசிறிகள், கிறைன்டர்கள், வீடியோ, ஓடியோக் கசற்கள் கல்குலேட்டர்கள் மின்சார உபஉறுப்புக்களை உத்தரவாதத்துடன் நிதான விலையில் பெற்றுக்கொள்ள.

- ★ T. V. ரேடியோ, மின்சார பொருட்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள...
- ★ சிறந்த முறையிலும், உத்தரவாதத்துடனும் (பழைய, புதிய) அன்ரனா பொருத்திக்கொள்ள

நியூ சிற்றி ரேடர்ஸ்,
135, கஸ்தூரியார் வீதி,
(குளத்துக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

T.P - 3226 (2022)

பொதுசன நூலகம்

### இன்று ஒரு தகவல்

## எளிமையே உயர்வு கொடுக்கும்

ஒரு ஏழைப் பிராமணர் ஒரு நதியில் நீராடத்தயார்செய்து கொண்டிருந்தார். அவரிடம் வந்த கிரேக்க நாட்டுத் தூதுவர் 'பகவான் கௌடில்லியரின் வீடு எங்கே இருக்கிறது' என்று கேட்டார், 'அதோ இருக்கும் குடிசைதான் கௌடில்லியரின் வீடு என்றார்' அந்தப் பிராமணர்.

கிரேக்க தூதுவர் வீட்டின் அருகே சென்றார். அது புல் வேய்ந்த எளியதோர்குடிசை. அதனுள் மர ஆசனங்கள் எதுவுமில்லை. ஒரு புற்பாயில் பேரரசின் பிரதம மந்திரி சாணக்கியர் எனப்படும் கௌடில்யர் தங்கியிருந்தார். அவ்வீட்டில் சில மட் பாத்திரங்களும் ஒரு வேஷ்டியும் காணப்பட்டது.

நதியில் குளித்துக் கொண்டிருந்த ஏழைப்பிராமணர் தான் கௌடில்யர் எனப்படும் சாணக்கியர் என்று கிரேக்க தூதுவர் அறிந்து கொண்டார். பெருவியப்பு எய்தினார். அவரை அடிபணிந்து ஆசிபெற்றுச் சென்றார். சாணக்கியரின் எளிமை அவருடைய போதனைகட்குப் பெரும்புகழினைப் பெற்றுத்தந்தது.

நன்றி

விவேகவாணி

# வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் இடநெருக்கடி

## அல்லற்படும் நோயாளர்

### யாழ்.போதனாவைத்தியசாலையில்சம்பவம்

(ஈச்சமோட்டை)

யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் மிகுந்த இடநெருக்கடி நிலவுவதாக சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால், வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளிகள் அதிகரிக்கின்ற வேளையில், போதிய இடவசதி இன்மையால் வெளிநோயாளர் பிரிவை விட்டு வெளியேறி மர நிழலை நாடுவதுடன், வெயிலில் வாட வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

இந்நிலை,நோய் மாற்றுச் சிகிச்சைக்குச் செல்பவர்களுக்கு,மேலும் நோய்கள் ஏற்பட வழிவகுக்கும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது விடயத்தை கருத்தில் கொண்டு வைத்தியசாலை நிர்வாகத்தினர் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்கள் சிரமம் நீக்க வேண்டும் என பாதிக்கப்படும் பொதுமக்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (உ-59)

## சூழல் மாசடைய, யாழ். நகர வர்த்தகரின் செயற்பாடுகளும்காரணம்?

(அரியாலை)

யாழ். நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் அமைந்துள்ள மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கர வண்டி திருத்தங்களின் கழிவுப்பொட்களை அந்த விடத்திற்கு அருகாகவே வைத்து எரியூட்டப்படுவதனால் பொதுமக்கள் பெரிதும் இடைஞ்சல்களிற்கு உள்ளாகி வருவதாக கூறப்படுகிறது.

எஞ்சிய கழிவு ரயர்கள் போன்றவற்றை வீதிக்கருகில் போட்டு மாலை வேளைகளில் எரிப்பதால், அப்பகுதியூடாகசெல்வோரும் அருகில் வியாபார நிலையங்களை நடத்துவோரும் கிளம்பும் பெரும் புகை காரணமாக பல்வேறு இடையூறுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன், சூழலை மாசுபடுத்தவல்ல நச்சு வாயுக்கள் இப் புகையினின்றும் வெளியேறுவதால் எதிர்காலத்தில் சூழல் மாசுபடுதலை இச் செயற்பாடு ஊக்கப்படுத்தும் எனவும் பொதுமக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, பலசரக்கு கடைகளின் பேப்பர், மற்றும் பொலித்தீன் கழிவுகளும் இவ்வாறு கடைகளிற்கு முன்பாக வைத்து எரிக்கப்படுவதாகவும், இதுகுறித்து,

காலையில் சாம்பிராணிப் புகையும் மாலையில் நச்சுப் புகையுமா எனவும் பொதுமக்கள்கவலை கலந்த ஏளனம் வெளியிட்டுள்ளனர். (உ-116)

## இராசி பலன்

19-12-2000
(மார்கழி 4, செவ்வாய்)
நவமி மு.இ 9 27 வரை
அத்தம் மு,இ 11.45 வரை
ராகுகாலம் 3.24- 4.54
சுபநேரம் 10.54- 12.24
சித்தம்

**மேடம்**
முயற்சி விருத்தி, சத்துரு ஜெயம், நோய் குணமடைதல், தனவரவு.

**இடபம்**
சிறு வியாதி, மனக்கிலேசம், தாழ்வு நிலை, காரிய தாமதம்.

**மிதுனம்**
பயந்த சுபாவம், தன்நம்பிக்கைக் குறைவு, கல்விச் சிறப்பு, தாய்வழி உறவு.

**கடகம்**
பிரயாணம், தனவரவு, இனிய அனுபவம், முயற்சி வெற்றி.

**சிங்கம்**
பணச் செலவு, விதண்டாவாதம், கௌரவக் குறைவு, காரிய தாமதம்.

**கன்னி**
தெய்வானுகூலம், போசன சுகம், சயன சுகம், உடல் நலம்.

**துலாம்**
அலைச்சல், கோபப்படுதல், காரிய தாமதம், திடீர் நன்மை.

**விருச்சிகம்**
கீர்த்தி, தனலாபம்,குடும்ப சுகம், நண்பர்கள் சந்திப்பு.

**தனுசு**
தொழில் மேன்மை, முயற்சிகள் கைகூடும், பணியாளர் உதவி, உஷ்ணரோகம்.

**மகரம்**
பிரயாணம், கட்டுப்பாடு, வயிற்றுக் கோளாறு, அச்ச நிலை.

**கும்பம்**
மனஸ்தாபம், சிறுவியாதி, காரிய தாமதம், நன்மை விருத்தி.

**மீனம்**
போசன சுகம், சுவாரஸ்யம், தனவரவு, காரிய ஜெயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## டெங்கு ஒழிப்பில் அதிகாரிகள் தீவிரம்

### சமுர்த்தி அலுவலரும் ஈடுபடுவர்

(சங்கானை)

யாழ். மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதை தொடர்ந்து வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் அதற்கான முன் எச்சரிக்கை நடவடிக்கையில் பொது சுகாதார பரிசோதகர்களுடன் இணைந்து சமுர்த்தி உத்தியோகத்தர்களும் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக பிரதி வெள்ளிக்கிழமை தோறும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சுகாதார பரிசோதகர்களுடன் இணைந்து இந்நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கான ஒழுங்குகளை மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி கே. கணேஸ்ராசா மேற்கொண்டுள்ளளார். (க-23)

## பருத்தித்துறை பிர.சபை பெருமளவு நிதி ஒதுக்கீடு

(மந்திகை)

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பிரதேச சபை நிதியிலிருந்து 6 இலட்சத்து 4 ஆயிரத்து 14 ரூபா பல்வேறு வேலைத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பிரதேசச்சபையின் உபதலைவர் பரஞ்சோதி ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிதியிலிருந்து சுப்பர்மடம் பொதுமலசல கூடத்துக்கு 75 ஆயிரம் ரூபா, சுப்பர் மடம் மயானம் 40 ஆயிரம் ரூபா, உருத்திராவத்தைப் பாடசாலை வீதி 1 இலட்சம் ரூபா, தட்டார் தெரு ஒழுங்கை 1 இலட்சம் ரூபா, வில்லியானந்தம் தெற்கு வீதி 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா, பொலிகண்டி சனசமூக நிலைய குழாய்க்கிணறு திருத்தம் 7 ஆயிரத்து 500 ரூபா, ஆண்டிப்பனை வீதி திருத்தம் 80 ஆயிரம் ரூபா, அலுவலக கட்டடம் 75 ஆயிரத்து 14 ரூபா செலவிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-23)

## வடமராட்சிப் பகுதியில் 4 இலட்சத்து 63 ஆயிரம் பனம் விதைகள் நாட்டல்

(தென்மராட்சி)

பனை அபிவிருத்திச் சபையினால் கடந்த ஐந்து வருடங்களில் பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய மூன்று பிரதேச செயலர் பிரிவுகளில்மொத்தமாக4 லட்சத்து 63 ஆயிரத்து 279 பனம் விதைகள் நாட்டப்பட்டதாக பனை அபிவிருத்திச் சபை வட்டாரங்களில் இருந்து அறியப்படுகின்றது.

பருத்தித்துறை பிரதேச செயலர்பிரிவில்ஒருஇலட்சத்து 99 ஆயிரத்து 254 பனம் விதைகளும் கரவெட்டியில் ஒரு இலட்சத்து 40ஆயிரத்து 25 ம் மருதங்கேணியில் ஒரு இலட்சத்து 24ஆயிரத்து360ம் சபையின் முயற்சியினால் நாட்டப்பட்டன.

இவற்றுள் சுமார் 50 சதவீதமான பனம் விதைகள் முளைத்துள்ளதாகவும் பனை அபிவிருத்திச்சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ் குடாநாடு தழுவியரீதியில் அழிக்கப்பட்ட பனைமரங்கள் மற்றும் நாட்டப்பட்ட பனம் விதைகள் பற்றிய புள்ளி விபரங்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மூலம் திரட்டப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். (க-77)

## நெடுந்தீவில் பல்கலை மாணவரால் பயனுள்ள மருத்துவமுகாம்

(நெடுந்தீவு)

யாழ். பல்கலைக்கழகமருத்துவ பீட மாணவர்களினால், இம்மாதம் 15ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை நெடுந்தீவு பிரதேசத்தில் நடமாடும் மருத்துவ சேவை நடத்தப்பட்டது.

இந் நடமாடும் சேவையின் போது 8தொடக்கம் 45வரையான வயதுடைய பெண்களுக்கு ரூபெல்லா தடுப்பூசி ஏற்றப்பட்டதோடு மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

நெடுந்தீவில் உள்ள 85 வீதமான குழந்தைகள் போசாக்கின்றி வளர்ச்சி குன்றிய நிலையில் இருப்பது இந் நடமாடும் சேவையின் போது இனம் காணப்பட்டது.

இப்பகுதி அனைத்து மக்களுக்கும்போசனம், காற்றினால் பரவும் நோய்கள், டெங்கு காய்ச்சல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கருத்துரைகளும் விவரணச் சித்திரமும் பல்கலைக்கழக மாணவர்களால் இந் நிகழ்வில் நடத்தப்பட்டது. (உ-82)

## ஆத்திசூடி முற்றோதல்! விழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதியில் எதிர் வரும் தைத் திங்களில், அறம் உரைத்த ஔவையின் ஆத்திசூடி முற்றோதல் விழா ஐந்து தினங்கள் கொண்டாடப்படவுள்ளது.

புங்குடுதீவு வட இலங்கை சர்வோதயமும், பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க கல்வி, கலை கலாசாரப் பிரிவும் இணைந்து நடத்தும் இவ் விழாக்களில் நினைவுப் பேருரைகளும், ஆத்திசூடி முற்றோதல் பரிசளிப்பும் இடம்பெறும். (உ)

## நாடக ஒத்திகை

(மல்லாகம்)

சுன்னாகம் அவைக்காற்றுக் குழுவினரின் நாடக ஒத்திகை நாளை பி.ப 4.00 மணியளவில் சுன்னாகம்அவைக்காற்று மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் ஷேக்ஸ்பியரின் 'காம்லெட்' நாடக ஒத்திகை இடம் பெறும். (ச-ப-14)

## பொதுசன உதவி கொடுப்பனவு

(மந்திகை)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் பொதுசன உதவிக் கொடுப்பனவுகள் கடந்த 15 ஆம் திகதி முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

இப் பிரிவில் மாதாந்த பொதுசன உதவிப் பணம், புற்று நோய் கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் எதிர் வரும்25 ஆம் திகதிவரைமேற்படிகொடுப்பனவுகளைப்பெற்றுக் கொள்ளலாம் என தபாலக அதிபர்கள் தெரிவித்துள்ளனர். (ச-23)

## வாகனச் சாரதிகளுக்கு வேதனை கொடுத்து வந்த கொள்ளைக் குழு கைது

### அனைவரும் இளம் பெண்களாம்

(கொழும்பு)

பல்வேறு வாகனக்கடத்தல் மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட ஏழு பேர் கொண்ட இளம் பெண்கள் குழுவினரை, கடந்த செவ்வாயன்று திவிலுப்பிட்டிய பொலிஸார் ஆயுதங்களுடன் கைது செய்துள்ளனர்.

இந்தக் குழுவின் தலைவி ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் 21 வயதுடைய இளம் யுவதி என்று தெரிய வந்துள்ளது.

அத்துடன், இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற இளம் பெண்கள் இருவரும் இக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் வசமிருந்த கைத்துப்பாக்கிகள் துப்பாக்கி ரவைகள் என்பவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதேசமயம், இப்பெண்கள் குழுவினரால் கடத்தப்படும் வாகனங்களின் சாரதிகளை மூர்க்கத்தனமாக இவர்கள் தாக்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-05)

## வருடாந்த இசைவழிபாடு

(மந்திகை)

அல்வாய் மெதடிஸ்த திருச்சபையின் வருடாந்த இசை வழிபாடு நாளைபுதன்கிழமை பி.ப 4.00 மணிக்கு அருட்செல்வி ஜெயக்குமாரி ரட்ணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (செ-23)

# யாழ்ப்பாணப் பகுதியில் தொடரும் குதிரை ஓட்டம்
# மாணவரின் கல்விவளர்ச்சிக்குவேட்டுவைக்குமா?

நாடுமுழுவதும் க.பொ த சாதாரண (தரம்) பரீட்சை வெகு அமைதியாக நடந்து கொண்டிருப்பது குறித்து கல்வியாளர்கள் பலரும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

பரீட்சை மேற் பார்வையாளர்கள், கடமை உணர்ச்சியுடன் செயற்பட்டு வருவதும் இங்கு குறிட பிடத்தக்கது.

இந்நிலையில் சிலர் பரீட்சையின் நோக்கை குழப்புப் விதத்தில் ஆள் மாறாட்டம் செய்து (குதிரையோடி) பரீட்சைஎழுதும் சம்பவங்கள் நிச்சயமாக கல்வியாளர்களால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றே.

உரும்பிராய் பகுதியிலும், வடமராட்சிப் பகுதியிலும் இத்தகைய ஆள் மாறாட்டம் செய்து பரீட்சை எழுதியதும் அவை பரீட்சை மேறபார்வையாளர்களால் சண்டு பிடிக்கப்பட்டு தண்டனைவழங்கப்பட்டதும் சுட்டடிக்காட்டப்பட வேண்டியவையே.

இத்தகைய சம்பவங்கள் இம் முறை மட்டுமல்லநீண்டகாலமாகவே நடைபெற்றுவருவது பலராலும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

★ நீர்வையூரான் ★

அடையாள அட்டைகளில் தில்லுமுல்லுகள் புரிந்து தம்மையும் ஏனையோரையும் ஏமாற்றும்'பிரகிருதிகள்' இக் கைங்கரியத்தை விட்டொழிக்கவேண்டியதுஅவசியமும் அவசரமுமாகும்.

இச்செய்கையானது சம்பந்தப்பட்ட மாணவனின் ஒழுங்கான கல்விவளர்ச்சியைதடைசெய்வது மட்டுமன்றி மாணவசமுதாயத்தையே பெரும் பாதிப்புக் குள்ளாக்குவதையும் சம்பந்தப்பட்டோர் புரிந்து கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் தொடரும் யுத்த அவலங்கள், இடம் பெயர்வுகள், குறிப்பாக தென்மராட்சி மாணவர் மற்றும் கொழும்புத்துறைப் பகுதி மாணவர் மிகுந்தகஷ்டத்தின் மத்தியில்நீண்ட தூரம்சென்று பரீட்சை எழுதி வருகின்றஇக் கால கட்டத்தில்இது போன்ற துரோக சம்பவங்கள் நடைபெற அனுமதிக்கக் கூடாது.

இச் செயலானது ஒழுங்காகப் படித்து பரீட்சை எழுதும் மாணவர்களை நிச்சயம் பாதிக்கவே செய்யும்.

அதுமட்டுமன்றிகுறிப்பிட்ட பாடம் நடை பெறுவதற்கு முந்தியே அப்பாடத்திற்குரிய வினாத்தாள்வெளியாகுவதாகக் கூறிபோலி வினாத்தாளை அச்சிட்டு மிகக்கூடியவிலைக்கு விற்கும் சமூகவிரோதச்செயல்களிலும் சில புல்லுருவிகள்ஈடுபட்டு வருவது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

அண்மையில் கணித பாட பகுதி 2 வினாத்தாள் கொழும்பில்வெளியாகிவிட்டதாகக் கூறி போலி வினாத்தாள் அச்சிட்டதுடன் அவை 500 ரூபா முதல் 1000 ரூபா வரை விற்கப்பட்டு வந்தமையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

கலப்படம், ஏமாற்றுவேலைகள், கல்வியுலகிலும் புகுந்து விட்ட செயல் நிச்சயம் கல்வியாளர்களால் ஜீரணிக்கக் கூடிய ஒன்றல்ல.

பரீட்சை எழுதும் வேளையில் மாணவர்களின் மன நிலையை குழப்பும் விதத்தில் யாரும் ஈடுபடக் கூடாது.

இது விடயத்தில் முறைகேடு எங்கு நடைபெற்றாலும் அவைகளைத் தெரியப்படுத்தப்பட வேண்டும். கல்விஆர்வலர்கள் பலரும் ஒன்றுசேர்ந்து இத் தகைய செயற்பாடுகளை முழுமையாக கண்டிக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

துன்பங்கள் ; துயரங்கள் சூழ்ந்தாலும் தமிழரின் கல்வி நிலை என்றும்தளரக்கூடாது; இது விடயத்தில் கல்வியாளர்கள் ஊடகவியலாளர்கள், உட்படபலரும்ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் இத் தகைய வேண்டாத சம்பவங்களை ஒழித்துக்கட்டுவதுடன் தமிழனின் மேன்மையை வலியுறுத்தும் விதத்தில் சகலரும் செயற்பட வேண்டியது அவசியமாகும். (க)

---

### துன்ப, துயரங்கள் சூழ்ந்த
# அவல வாழ்வை இட்டு மனம் சோரக் கூடாது
# சுபீட்சமான வாழ்வு சகலருக்கும் உண்டு
## பேராயர் எஸ்.ஜெபநேசன் தெரிவிப்பு

(அரியாலை)

யேசு பிறந்தபொழுது இருந்த காலச்சூழல் எமக்கு நல்ல பாடமாக இருக்கிறது. துக்கங்களால் கண்ணீரில் கரைந்த அவலவாழ்வைஇட்டு நீங்கள் சோர்ந்து போகக் கூடாது. நெருங்சாலத்தில் சிறப்பான சுபீட்சமான எதிர் காலமொன்று காத்திருக் கிறது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் மிலேனியம் ஆண்டின் ஒளிவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அருளுரை வழங்கிய தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் அதிவண கலாநிதி எஸ். ஜெபநேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மருதனார்மடம் மகளிர் நிலையத்தில் கிறிஸ்தவ மன்றத்தலைவர் செல்வி. சுரேந்தினி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை அருட்தந்தை மைக்கல் சௌந்தர நாயகம் திருப்பலி ஒப்புக் கொடுத்தலுடன் ஆரம்பித்து வைத்தார்.

கலாநிதி எஸ். ஜெபநேசன் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தேசிய கல்வியியற் கல்லூரியின் கலை ஒளிவிழாவில் கலந்துகொள்வதில் பெருமகிழ்வு அடைகிறேன். கண்ணன்தாசன் வானளந்திருக் குமரா... என விழித்துப் பாடிய யேசு கிறிஸ்துவின் பிறப்பு, இருள் சூழ்ந்த இவ்வுலகத்திற்கு ஒளியூட்டிய அக்காலச் சூழலிலே எம் மண்ணிலும் இன்று காணப்படுகிறது. கடந்த காலத்தைப் பற்றிய தெளிவு நிலைப்பாடானது பழைமையை நினைத்து பூரிப்படைந்து எமது வாழ்வியல் ஓட்டத்தைக் கொண்டு செல்ல உதவுகிறது.

பீடாதிபதி தி. கமலநாதன் உரையாற்றுகையில்,

ஆசிரிய மாணவர்களின் மனித விழுமியங்கள் மேம்பட சகலமதங்களும் கூறும் தத்துவத்தையும் அறிந்து கொள்வது அவசியமானது. வெளிநாடுகளில் எவ்வாறு விழுமியச் செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றனஎன்பதை நாம் உற்று நோக்கவேண்டும்.

எமது கல்லூரிக்கும் எமது கல்விச் சமூகத்திற்கும் யேசுநாதரின் பிறப்புக்கும் இடையே ஒரு தொடர்புடைமையைக் காணலாம். மாட்டுத் தொழுவத்தில் பிறந்த யேசு உலகிற்குஒளியைக் காட்டிய வழியில் தற்காலிகமாக நாம் பல வசதிகள் குறைவான நிலையில் இயங்கினாலும் இச் சமூகத்திற்குப் பல சிற்பிகளைப் படைத்துத் தருவோம்என உறுதி கூறுகிறேன். உள்ளூர் வெளியூர் தடைகள் பல இருந்தாலும் நாம் அவற்றைப் பொருட்படுத்தாது உற்சாகமாக முன்னேறிச் செல்வதற்கு சமூகம் தரும் ஊக்கம் பக்கபலமாக அமைகிறது என்றார்.

சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் எஸ். தனபாலன் உட்பட பிரமுகர்பலர் உரை யாற்றினர்.

---

# சுத்திகரிக்கப்படாத உப்பு சுழிபுரத்தில் மீட்பு

(சங்கானை)

பொதி செய்யப்படாமல் திறந்த நிலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த உப்பு பொலிஸாரின் உதவியுடன் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சுழிபுரம் சத்தியக்காட்டுப் பகுதி வர்த்தகர் ஒருவரால் திறந்த பைகளில் வைத்து உப்பு விற்பனை செய்யப்படுவதாக அப்பகுதி சுகாதார பரிசோதகரின் கவனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதையடுத்து, மானிப்பாய் பொலிஸாரின் உதவியுடன் சுத்திகரிக்கப்படாத அவ் உப்பு பறிமுதல் செய்யப்பட்டது.

அத்துடன், சம்பந்தப்பட்ட வர்த்தகரின் வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுத்திகரிக்கப்படாத பல மூட்டை உப்பும் கைப்பற்றப்பட்டது.

இதனையடுத்து இப்பகுதி பொதுமக்களிடையே பொதி செய்யப்படாத சுகாதார மற்ற உப்பை கொள்வனவு செய்யவேண்டாம் என சம்பந்தப்பட்ட பகுதி சுகாதார பரிசோதகர் வே.ரதீஷ் தலைமையிலான குழுவினரால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (உ-ப-18)

# வேடுவ சமூகம் அரசிற்கு வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கை வேடுவ சமூகத்தினர் வேட்டையாடும்போது கைது செய்யப்படுவது பற்றி உடன் உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேடுவ சமூகத் தலைவர் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காடுகள் சிலவற்றில் வேட்டையாடுவதற்காக தடை விதிக்கப்பட்டிருப்பதனால் வேடுவர் சமூகம் உணவுப் பிரச்சினையை பெரிதும் எதிர்நோக்கியுள்ளது.

தம்பல காட்டுப் பகுதியையும் அதனை அண்டிய பகுதிகளையும் தாம் வேட்டையாடுவதற்கு அரசால் அனுமதி வளங்கப்பட்டுள்ள போதும் வனப் பாதுகாப்பு அதிகாரிகள் தாம் வேட்டையாடுவதற்கு தண்டயாக இருப்பதாகவும் வேட்டையாடுபவர்கள் அதற்கான உரிய அனுமதிப் பத்திரத்துடன் செல்லும் போதுகூட வனப்பாதுகாப்பு அதிகாரிகள் அதை அலட்சியம் செய்வதாகவும் தெரிவித்துள்ளனர். (க-59)

# கிறிஸ்மஸ் விழா

இம்மாதம் 28 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை திருமறைக்கலாமன்ற அரங்கில் 'கிறிஸ்மஸ் விழா' கொண்டாடப்படவுள்ளது.

இவ் விழாவில் 'குடிலின் கானங்கள்' எனும் இசை நிகழ்ச்சி சிறப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (உ)

# அ. அட்டை கண்டெடுப்பு

(மந்திகை)

கைதடி நாவற்குழியைச் சேர்ந்த தம்பையா உதயராணி என்பவருடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன கண்டெடுக்கப்பட்டு மந்திகை ஈ.பி.டி.பி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்களைத் தொடர்பு கொண்டு அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச சபை உப தலைவர் ப. ரவீந்திரன் தெரிவித்துள்ளார். (செ-23)

# மரக்கறி விலை அதிகரிப்பு

(துன்னாலை)

கரவெட்டித் நெல்லியடிப் பொதுச்சந்தையில் மரக்கறிகளின்விலைஉயர்வாகக்காணப் படுகிறது.

கத்தரிக்காய் கிலோ 80ரூபாவாகவும், பயற்றங்காய் கிலோ 100 ரூபா வாகவும், கீரை ஒரு பிடி 5 ரூபாவாகவும் விலை அதிகரித்துள்ளது. (உ-41)

# சங்கேமுழங்கு

## சிறுவரின் உயிருடன் விளையாடும் ஈனத்தனம்
### மருத்துவ உலகிற்கு இது தேவையா?

''மருத்துவர்களின் தவறுகள் மண்ணிற்குள் புதைக்கப்படுகின்றன. நீதிபதியின் தவறுகள் குற்றவாளிக் கூண்டில்'' என்று ஒரு பழமொழி அல்ல. புது மொழி வழக்கிலிருந்து வருவது யாவரும் அறிந்ததே.

இவ் வாசகத்தை வலியுறுத்துவது போல யாழ்ப்பாணம் நல்லூர் முத்திரைச்சந்தையில் இயங்கும் தனியார் வைத்தியசாலையில் மனித உயிர்களுடன் விளையாடிய ஒரு சம்பவத்தை குறிப்பிட்டாக வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டுள்ளது.

காய்ச்சல் நோய் வாய்ப்பட்ட 4 வயதுச் சிறுவன் ஒருவன் சிகிச்சைக்காக குறிப்பிட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான்.

அங்கு வைத்தியரின் பணிப்பின் பேரில் சிறுவனுடைய சிறுநீரும், இரத்தமும் பரிசோதிக்கப்பட்டு பிரஸ்தாப சிறுவனுக்கு சீனிச்சத்து இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டு அதற்காக மருந்துக் குளிசைகள் வழங்க சிபார்சு செய்யப்பட்டது.

இதற்காக 350 ரூபா பணமும் சுளையாக அறவிடப்பட்டது. இவ் விடயத்தில் சந்தேகப்பட்ட பிரஸ்தாப சிறுவனின் தகப்பன் சிறுவனை அழைத்துச் சென்று வேறுஓர் வைத்தியசாலையில் இரத்தம் மற்றும் சிறு நீர்ப் பரிசோதனை செய்த போது பிரஸ்தாப சிறுவனின் இரத்தம் மற்றும் சிறு நீரில் நீரிழிவு நோய்க்கான வாய்ப்பே இல்லை என்று தெரிவிக்கப்பட்டதுடன் இதற்காக 150 ரூபா மட்டுமே அறவிடப்பட்டதாம். தற்பொழுதுசிறுவன் தகுந்தசிகிச்சையின்பின்பூரண சுகமடைந்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தெய்வத்திற்கு அடுத்த நிலையில் வைத்துப்போற்றப்பட வேண்டிய வைத்தியர்கள், மற்றும் வைத்திய நிலையங்கள் வெறும் பணத்தை மட்டும் நோக்காக கொண்டு செயற்படாமல் சற்று மனிதாபிமானத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும்.

இது விடயத்தில் பிழை எங்கு நடந்தது என்பதை ஆராய்வதை விட சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நீதியான நேர்மையான முறையில் செயற்பட வேண்டும் என்பதே எமது வேணவா இது போன்ற மனித உயிருடன் விளையாடும் சம்பவங்கள் இனிமேலும் எமது மண்ணில் தொடராமல் பார்த்துக் கொள்வது அனைவரதும் கடமையாகும்.

க. பரமேஸ்வரன்
(இடம் பெயர்ந்து நீர்வேலியில் வசிப்பவர்.)

பொதுசன நூலகம்

எள்ளாமை வேண்டுவான்
என்பான் எனத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு
- குறள்

# வலம்புரி

## ஏழைகளின் துரோகிகள்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட நிவாரண மீளாய்வுகளின் போது குறிப்பிட்ட சில கிராம சேவையாளர்கள் நிவாரண அட்டைகளில் துஷ்பிரயோகம் செய்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மோசடியில் ஈடுபட்ட கிராம சேவையாளர் ஒருவர் தற்காலிக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். ஏனையவர்கள்மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் உரிய இடங்களுக்கும் நடவடிக்கைக்காக தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளது.

இத்துணிந்த செயலை மேற்கொண்ட நல்லூர் பிரதேச செயலர் பாராட்டுக்குரியவர் என்பதுடன் அவரின் இந்நடவடிக்கை ஏனைய பிரதேசசெயலர்களுக்கும் நல்லதோர் வழிகாட்டலாக இருக்கும் - இருக்க வேண்டும் என்பது மக்களின் விருப்பாகும். யாழ் - குடாநாட்டு மக்கள் - அதிலும் ஏழைகள் யுத்தத்தின் பிடிக்குள் சிக்கி நலிவடைந்துள்ள நேரத்தில், அவர்களுக்கென வந்த நிவாரணத்தையே சூறையாடும் கிராம சேவையாளர்கள் நம்மத்தியில் இருப்பார்களாயின் அவர்கள் 'ஏழைகளின் துரோகிகள்' என்றே வர்ணிக்கப்பட வேண்டியவர்கள். ஒருசில கிராமசேவையாளர்களின் சூறையாடும் போக்கும்- செயற்பாடுகளும் தம்மையே அர்ப்பணித்து தியாகத்துடன் புனிதப் பணி செய்யும் எத்தனையோ கிராமசேவையாளர்களின் மனதையும் புண்படுத்தவே செய்யும் என்பதை மறுப்பதற்கில்லை.

ஒரு பக்கத்தில் ஏழைகளின் நிவாரணத்தை சூறையாடும் கிராம சேவையாளர்கள் மறுபுறத்தில் ஏழைகளுக்கு தமது செல்வத்தையே ஈர்ந்தளிக்கும் கிராம சேவையாளர்கள் இப்படி இரு வர்க்கம் நம்மவர்களில் இருக்கவே . செய்கிறார்கள்.

இவர்களில் முதலாவதாகக்கூறியகிராம சேவையாளர்கள் நல்லூர் பிரதேச சபையில் மட்டுமல்ல நாட்டிலுள்ள எல்லாப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் இருக்கவே செய்கிறார்கள். ஆனால் நல்லூர் பிரதேச செயலர் துணிவுடன் எடுத்த நடவடிக்கையை எல்லாப்பிரதேச செயலர்களும் எடுப்பதில்லை. அதன் காரணமாகவே குறிப்பிட்ட கிராமசேவையாளர்களின் கொள்ளையடிப்புத் தொடர்கிறது. இதற்குச் சில சங்கக்கடை மனேஜர்களும் உறுதுணையாக செயற்படுகிறார்கள். இத்துரோகச்செயலை நிறுத்த மக்கள் போர்க்கொடி தூக்கவேண்டும். அப்போதுதான் எல்லா விடிவும் கிடைக்கும்.

## ஆண்களுள்ளத்தைகவரும் பல்குழல் ஆபரணங்கள்

### யாழ்ப்பாணத்தில் பெரும் கிராக்கியாம்

(ஈச்சமோட்டை)

வல்லவன்கையில்புல்லும் ஆயுதம் என்றுமாப் போலயுத்தத்திற்குபயன்படுத்தப்பட்டுவரும் பல்குழல் எறிகணையின் பாகங்களிலிருந்து ஆபரணங்கள் தயாரிக்ப்படும் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி மேலும் அறியப்படுவதாவது. இவ் ஆபரணங்களைஅணிவதில்ஆண்கள் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர்.

பல் குழல் எறிகணைத்தாக்தலின் போது எஞ்சி விழும் பிற்பாகத்தில் (கப்) உள்ள பெறுமதியான செப்பு உலோகத்தினை உருக்கித் தகதகவென மின்னும் ஆபரணங்களைச் செய்து இவர்கள் அணிகின்றார்கள். உயிர் குடிக்கும் எறிகணையின் பாகங்களை உருக்கி ஆபரணம் செய்யும் எம்மவர்களின் கெட்டித்தனத்தை எண்ணி சிலர் மூக்கில் விரலை வைக்கிறார்கள்.

(செ-59)

## ஆசிரியர் செயலமர்வு

(கோப்பாய்)

வடக்குகிழக்கு மாகாணக் கல்வியமைச்சும் ஜேர்மன் தொழில்நுட்பக்கூட்டுஉழைப்பகமும் இணைந்து நடத்தும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கட்கான சேவைக்காலப் பயிற்சிச் செயற்றிட்டமும் மகிழ்ச்சிகரமான கற்றல் பயிற்சி வகுப்பும் எதிர்வரும் 23,26,27, 28,29,30 ஆகிய திகதிகளில் மு.ப 9.00 பி.ப 5.00 மணிவரை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜே-7குடும்ப இலக்கத்தைக் கொண்டகோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளில்கடமையாற்றும் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்துவரையான அனைத்து ஆசிரியர்களையும் இச்செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

(உ-79)

## தனிநடிப்பு போட்டி

(மல்லாகம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் ஏ.ரி. பொன்னுத்துரையின் நடகவளர்ச்சி நிதிஉதவியுடன் அண்மையில் தனி நடிப்புப் போட்டி நடத்தப்பட்டது.

இப்போட்டியில், ப.கேதீஸ்வரன் மல்லாகம் முதலாம் இடத்தையும் க. சந்திரகுமார் சுன்னாகம் இரண்டாம் இடத்தையும் ரி. வினோதினி தெல்லிப்பழை மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

(உ-ப-14)

## பொலிஸார் சோதனை

(ஈச்சமோட்டை)

யாழ். நகர்ப் பகுதியையும் அதனை அண்டிய பகுதிகளிலும் வாகனங்களின் உரிமத்தகடு மற்றும் ஓட்டுநர் உரிமப்பத்திரம் என்பன பொலிஸாரினால்சோதனை இடப்பட்டு வருகிறது.

திடீர் திடீரென சந்திகள் முடக்குகள் தோறும் பொலிஸார் நிறுத்தப்பட்டு வாகனங்கள் மறிக்கப் பட்டு சோதனையிடப்படுவதை காண முடிகிறது.

அண்மைக் காலமாக உரிய முறையில் வாகன உரிமத்தகடு பெறாத வாகனங்களை உரிய சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாதவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இதுவே யாழ். குடாநாட்டில் அதிகரித்துள்ள விபத்துகளுக்கும், அதன் காரணமாக மரணங்கள் நிகழ்வதற்கும் காரணமாகியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-59)

## தபாலகங்கள் தனி கட்டடத்தில்

(மந்துவில்)

தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, வலிகாமப் பகுதியில் கூட்டாக இயங்கிவந்த உப தபால் அலுவலகங்கள் தனிக் கட்டடங்களில் இயங்க ஆரம்பித்துள்ளன.

விடத்தற்பளை உப அஞ்சல் அலுவலகம் துன்னாலை கோவிற் சந்தைக்கு அருகில் உள்ள கட்டடத்திலும், மிருசுவில், கச்சாய் உபஅஞ்சல் அலுவலகங்கள் நெல்லியடி அரசடிச் சந்தியிலும், தச்சன் தோப்பு உபஅஞ்சல் அலுவலகம் அத்தியார் இந்துக்கல்லூரிக்கு அருகிலும் இயங்குகின்றது.

(செ-39)

## தீவக கல்விப் பணிமனை இடமாற்றம்

(சுண்டுக்குளி)

தீவகக் கல்விவலயப் பணிமனை எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு அருகாமையிலுள்ள கட்டடம் ஒன்றில் இயங்கவுள்ளது.

இதுவரை காலமும் ஊர்காவற்றுறை இலங்கை வங்கிக் கிளைக்கு அருகாமையில் தற்காலிகமாக இயங்கி வந்த அலுவலகம் போதிய வசதிகள இன்மை காரணமாகவே புதிய இடத்திற்கு மாற்றப் படவுள்ளது.

(ச-110)

## வீதியில் விளக்கில்லை

(செம்பியன்பற்று)

கல்வியங்காடு பிரதான வீதி தெருவிளக்கின்றி இருளில் மூழ்கியுள்ளமையால் இரவு நேரப் பிரயாணம் செய்வோர் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனால் வீதி விபத்துக்கள் ஏற்படக்கூடியசந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன.

இதேவேளை, இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி திருடர் தொல்லையும் இப்பகுதியில் அதிகரித்துள்ளது.

(ச-42)

## வீதி பாதுகாப்பு குறியீடு

(மந்துவில்)

நெல்லியடி, துன்னாலைப் பகுதிகளிலுள்ள பல வீதிகள் ஒன்று சேருமிடங்கள், முக்கிய ஒழுங்கைகள் பிரதான வீதியை சந்திக்குமிடங்களில் விபத்துக்களைத் தவிர்க்கும் முகமாக வீதிப் பாதுகாப்பு குறியீட்டுப் பலகைகள் நாட்டப்பட்டுள்ளன.

தற்பொழுது அதிகரித்துள்ள வீதிவிபத்துக்களை தவிர்த்து வீணான உயிர்ச் சேதங்களைத் தவிர்ப்பதற்கு இக்குறியீட்டுப் பலகைகள் நாட்டப்பட்டுள்ளமை பயன் தரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(செ-39)

## வடமராட்சிப் பகுதியில் வேலையற்றோர் விபரம் ஈ.பி.டி.பி சேகரிப்பு

(கரணவாய்)

வடமராட்சிப் பகுதியில் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளின் விபரங்களை அப்பகுதி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் கோரியுள்ளனர்.

இதற்கமைய தத்தம் பூரண விபரங்கள் உள்ளடங்கிய சுய விபர படிவங்களை பூர்த்தி செய்து அவ்வப் பகுதி ஈ.பி டி.பி காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது

இதற்கான மாதிரி விண்ணப்பப் படிவங்கள் வடமராட்சிப் பகுதியில் சனசமூக நிலையங்களின் விளம்பரப் பலகைகளில் ஒட்டப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது.

(உ-27)

## மோட்டர் திருட்டு மந்திகையில் சம்பவம்

(மந்திகை)

ஊரடங்கு வேளையில் மந்திகைப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மந்திகையிலுள்ள கடை ஒன்றின் பின்னால் இருந்த கிணற்றில் பொருத்தப்பட்ட மோட்டர் ஒன்று திருடப்பட்டுள்ளது.

அதேவேளை கடந்தமாதம் மந்திகை மருத்துவமனையின் முன்னாலுள்ள கடைஉடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

இத்தகைய திருட்டுக்கள் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

(ச-23)

## டெங்கு கருத்தரங்கு

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைக்குட்பட்டகுடத்தனை தாய்-சேய் சிகிச்சை நிலையத்தில் டெங்குமற்றும் மலேரியா போன்ற தொற்று நோய்கள் தொடர்பான கருத்தரங்கு ஒன்று அண்மையில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் அம்பன் சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர். (ச-23)

★ ★ ★

வலிகாமம்தெற்கைச்சேர்ந்த புன்னாலைக்கட்டுவன், ஈவினைகுப்பிளான்,ஏழாலை, சுன்னாகம் பகுதிகளில் உள்ள பாடசாலைகள், சிறுவர் பாடசாலைகளில் டெங்குக் காச்சல் பரவும் அபாயம் பற்றி அப்பகுதி பொது சுகாதார உத்தியோகத்தர்கள் பாடசாலை அதிபர், ஆசிரியர் மூலமாக, அறிவுறுத்தல் கருத்தரங்கு, பாடசாலை, ரிதியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது

டெங்கு நோய் காவியான நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தல், இதன் மூலம் பாடசாலைகளிலும் மாணவர்கள் வசிக்கும் வீடுகள், அதன் சுற்றுப் புறசூழலை துப்பரவாக வைத்திருத்தல் என்பனகுறித்து மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு வருகின்றது.

(உ-49)

## 'மானுடம்-3' நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

''மானுடம்-3'' சமூகவியல் நூல் வெளியீட்டுவிழா இன்று பிற்பகல் 3 30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சமூகவியல் சமூகத்தலைவர் ம. பிரதீபன் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, கலைப் பீடாதிபதி செ பாலச்சந்திரன் உயர் பட்டப் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

துறைத்தலைவர் கலாநிதி என்.சண்முகலிங்கன் நூலை வெளியிட்டுவைப்பார். முதற்பிரதியை இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் பெற்றுக் கொள்வார்.

மதிப்பீட்டுரையை அரசறிவியல் மூத்த விரிவுரையாளர் கலாநிதிஎஸ்.கே.எஸ்.நாதன் நிகழ்த்துவார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சமூகவியல் குடும்ப மூத்த உறுப்பினர் ரவீந்திரன் கலந்து கொள்வார்.

(இ)

## நஷ்டஈட்டு கொடுப்பனவு

(அச்சுவேலி)

கடந்த காலங்களில்இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக, குடியிருப்புகள் சேதமடைந்த வலி. கிழக்கு பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட கிராமசேவகர் பிரிவுகளைச்சேர்ந்த சுமார் 147 குடும்பங்களுக்கு, நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வலி கிழக்கு பிரதேச செயலக வட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந் நடவடிக்கையின் முதற்கட்டமாக வீடு சேதமடைந்தோருக்கான 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவில் 10 ஆயிரம் ரூபா வாழங்கப்படவுள்ளது.

இதற்கான பதிவுகளை மேற்கொண்ட பொதுமக்கள் தமது பகுதிக்குரிய கிராம சேவகர்களுடன் தொடர்பு கொண்டு பெயர்ப்பட்டியலில் தமது பெயர் விபரத்தை உறுதிப்படுத்தியபின்னர் தத்தமது வங்கிக் கணக்கினூடாக வங்கியில் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-4)

## வீதியோரத்தில் குப்பை

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட கல்வியங்காடு பிரதான வீதியின் இருமருங்கும் குப்பை கூழங்களாக நிறைந்து காணப்படுகின்றது.

மேற்படி பகுதியைச்சுத்தம் செய்வதில் மாநகர சபையினர் நாட்டம் குறைவாகவே உள்ளது எனவே இப்பகுதியைச் சுத்திகரித்து சுற்றுப்புறச் சூழலைத் தூய்மைப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நலன் விரும்பிகள் தெரிதுள்ளனர்.

(ச-42)

## பாராட்டுவிழா

பலாலி ஆசிரியர் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் சி. சுந்தரேசன் ஓய்வு பெறுவதை முன்னிட்டு அவரது சேவை நலன் பாராட்டு விழா கலாசாலை விஞ்ஞான மன்றத்தினரால் சுப்பிரமணிய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது

மன்றத் தலைவர் வே கமலநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் 'பரிதி வழித்த ங்க' என்னும் சஞ்சிகை வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ச-39)

# வலம்புரியின்
# ★ 1-வது ஆண்டு ★
# நிறைவு விழா - 2000
# அழைப்பிதழ்

இடம்:- துர்க்கா மணிமண்டபம், நல்லூர்.

காலம்:- 20.12.2000 புதன்கிழமை பிற்பகல் 2.00மணி

தலைவர்:- திரு. சி. வெற்றிவேலாயுதம்
(நிர்வாக இயக்குனர் வலம்புரி)

பிரதம விருந்தினர்:-
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்:- உயர்திரு க. சண்முகநாதன்
(அரச அதிபர், யாழ்ப்பாணம்)

வரவேற்புரை:- திரு. மு. வாமதேவன்
(செய்தி ஆசிரியர், வலம்புரி)

ஆசியுரைகள்:-
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்
நல்லை ஆதீன முதல்வர்

சிவஸ்ரீ நா. மகாதேவக் குருக்கள்
(காயத்திரி பீடம், இணுவில்)

வணபிதா ரூபன் மரியாம்பிள்ளை
(ஆசிரியர், பாதுகாவலன் பத்திரிகை)

வணபிதா. டேமியன் அடிகளார்

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி

அருட்கவி. விநாசித்தம்பி அவர்கள்
(தலைவர், இந்துப்பேரவை)

வாழ்த்துரைகள்:-
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
[பீடாதிபதி உயர்பட்ட ஆய்வுப்பீடம் யாழ். பல்கலைக்கழகம்]

உயர்திரு. து. வைத்திலிங்கம்
(மேலதிக அரச அதிபர் யாழ்ப்பாணம்)

செஞ்சொற்கொண்டல் ஆறு. திருமுருகன் [ஆசிரியர்]

உயர்திரு. கோ. சி. வேலாயுதம்
(முன்னாள் பிரதம ஆசிரியர் வலம்புரி, ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர்)

''ஓராண்டு நிறைவில் வலம்புரி''
திரு. ந. விஜயசுந்தரம்

நன்றியுரை:- கவிஞர். சு. துரைசிங்கம்
(ஓய்வுபெற்ற அதிபர், உதவி ஆசிரியர் வலம்புரி)

## இசை அமுதம்

குரலிசை:- ஸ்ரீ தர்ஷனன்
[உதவி விரிவுரையாளர் யாழ்.பல்கலைக்கழகம்]

வயலினிசை:- வித்துவான் அ. ஜெயராமன்

மிருதங்க இசை:- எஸ். மகேந்திரன்
[விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்]

முகர்சிங் இசை:- வி. ரமணா
[இசைத்துறை யாழ். பல்கலைக்கழகம்]

அன்பர்கள், நண்பர்கள், வாசகர்கள்
அனைவரையும்
ஆண்டு நிறைவு விழாவில் கலந்து
சிறப்பிக்குமாறு பேரன்புடன்
அழைக்கின்றோம்.

**வலம்புரிக்குடும்பம்**
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

### இளம் பெண்...

டர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதே வேளை மானிப்பாய் பகுதியிலும் நற்குணம் மனோரஞ்சன் [வயது 20 கட்டுடை] என்பவர் 14 ஆம் திகதி வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. [வ-12]

### மருந்துப்...

தொன் மருந்துப் பொருட்களை ஏற்றிக்கொண்டு புறப் பட்டுள்ளது. இக்கப்பலில் 25 வெளிநாட்டு தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளும் வரவுள்ளனர். எனினும் இக்கப் பலில் நோயாளர் எவரும் ஏற்றிவரப்படவில்லை என்று தெரியவருகிறது.

இதேவேளை இக்கப்பலில் திருகோணமலை தபால் நிலையத்தில் இருந்து சுமார் 400 தபாற் பொதிகளும் எடுத்து வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# யாழ். மாவட்ட அபிவிருத்தி குறித்து
# பலாலி படைத்தளத்தில் மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மேற் கொள்ளப்பட வேண்டிய அபி விருத்தித் திட்டங்கள் மற்றும் குடாநாட்டு மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் உயர் மட்டமாநாடொன்று நேற்று காலை பலாலி இராணுவத் படைத்தளத்தில் இடம் பெற் றுள்ளது.

அரச சார்பற்ற அமைப்புக் கள், சர்வதேச தொண்டு நிறு வனங்கள், மற்றும் யாழ்ப் பாண பொது அமைப்புக் களைச் சார்ந்த பிரதி நிதிக ளும் இராணுவ உயரதிகாரி களும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் அபிவி ருத்தி நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்று படைத்தரப்பில் பிரஸ் தாபிக்கப்பட்டதற்கு மாநாட் டில் கலந்துகொண்ட பொது அமைப்புக்கள் அதற்கு யுத் தம் நிறுத்தப்பட்டாலே அபி விருத்தியை ஏற்படுத்துவது முழுமையாக சாத்தியப்படும் என்று தெரிவித்துள்ளன.

யாழ்.குடாநாட்டு மக்கள் எதிர் நோக்கும் முக்கிய பிரச் சினைகள் தொடர்பாகவும் இம் மாநாட்டில் பிரஸ்தாபிக் கப்பட்டதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

இதேவேளை கடந்த வரு டமும் பரிஸில் இலங்கைக்கு உதவிவழங்கும் மாநாடு நடை பெற்ற சமயம் பலாலிப் படைத்தளத்தில் இதே போன்றதொரு உயர் மட்ட மாநாடு நடைபெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# விசாரணைக்கு உத்தரவு

வவுனியா செட்டிகுளம் மணியர் குளத்தில் பொது மகன் ஒருவர் கடத்திச் செல் லப்பட்டு சுட்டுக் கொல்லப் பட்ட சம்பவம் தொடர்பாக உரிய விசாரணையை நடத் துமாறு செட்டிகுளம் பொலிஸாருக்கும், இராணுவ கொமாண்டருக்கும் கடுமை யான உத்தர வொன்றைவவு னியா மாவட்ட நீதவான் எம். இளஞ்செழியன் பிறப் பித்துள்ளார்.

இக்கொலை தொடர்பான ஆரம்ப விசாரணையின் போது சுட்டுக் கொல்லப் பட்டவருக்கு காணி தொடர் பான வழக்கொன்று இருப்ப தாகவும், இதன்பின்னணியில் இக்கொலை நடைபெற்றிருக் கலாம் என்றும் சந்தேகம் எழுந்துள்ளது.

இக் கொலையுடன் மூவர் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் அதில் ஒருவர் அரச திணைக் களம் ஒன்றின் உயர் அதிகாரி என்றும் குறிப்பிடப்பட்டுள் ளது.

இராணுவ பாதுகாப்புப் பிரதேசத்தில் இச் சம்பவம் நடை பெற்றிருப்பதால், இதற்கு இராணுவத்தினரே பொறுப்பென்றும் ஆயுதம் தாங்கியவர்களால் இக் கொலை நடைபெற்றது என் றும் இக்கொலைகளை அனு மதிக்க முடியாது என்றும் எம்.இளஞ்செழியன்குறிப்பிட் டார். [வ]

### அங்காடி...

வியாபாரம் செய்வதனால் போக்குவரத்தில்மிகுந்தநெரு க்கடியும், விபத்துக்களும்சம்ப விக்கலாம் என்று கருதியே இவர்களுக்கு தனியான இடம் ஒதுக்கப்படுவதாகவும் தெரி விக்கப்படுகிறது. (வ-12)

### யுத்த...

வசதியுடன் விசேடபயிற்சி அளிக்கப்பட்டு வடக்குகிழக்கு பகுதியில் விடுதலைப்புலிக ளுக்குஎதிரான யுத்தத்தில்இப் புதிய படைப்பிரிவு ஈடுபடுத்த ப்படுமெனவும் மூன்றுவருடத் துக்குள் இப்புதிய படைப் பிரிவு புலிகளை யுத்தத்தில் தோல்வியடைச்செய்து யுத்த த்தை முடிவுக்கு கொண்டு வரும் என்றும்அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ—5)

### புலிகள்--

வருடத்தின் பின்னரே ஆக்க பூர்வமான பதிலை அளித் துள்ளார்கள்.

வடபகுதியில் தற்போது நிலை கொண்டுள்ள படை கள் வெளியேற வேண்டு மென்று விடுதலைப்புலிகள் கோரிக்கை விடுத்த போது 80 சதவீதமான மக்கள் அந் தப் பிரதேசங்களை மீண்டும் கைப்பற்றுவதற்கு இடமளிக்க வேண்டாம் என்று அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனர்.

உததேசிக்கப்பட்ட அரசியல் யாப்பின் பிரகாரம் உருவாக் கப்படும் புதிய சமூக பொரு ளாதார வரையறைகளுக்கு அமைவாக சிறுபான்மை மக் களின் உரிமைகளையும், பாது காப்பையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் இருந்தா லும் அது விடுதலைப்புலிக ளின் இணக்கப்பாட்டுடனோ அல்லது இல்லாமலோ இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார்.

இதேவேளை உதவி வழங் கும் நாடுகளின் பொதுக் கூட் டத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கவனத் தைத் தன்பால் ஈர்த்துள்ள தென்று அரசியல் அவதானி கள் கருத்து வெளியிட்டுள்ள னர். (வ)

### விகாரைகளை...

எடுத்துள்ளதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா நேற்று நடைபெற்ற கூட்ட மொன்றில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

ஹொறணை இராஜமகா விகாரையில் நடை பெற்ற கூட்டமொன்றில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா பேசுகையில் கூறியதாவது;

நாட்டின் ஒருமைப்பாட் டையும், இறைமையையும் பாதுகாக்க போதியளவு படையினர் தேவைப்படு கிறார்கள்.

இராணுவத்திற்கான ஆட் சேர்ப்பிற்கு தொண்டர்அடிப் படையில் கிராமங்கள் தோறும் விகாரைகளை மையமாகவைத்துஆட்களைத் திரட்டுவதெனவும், இதில் சேரும் தொண்டர் படை யினர் மூன்று வருடத்திற்குக் கடமையாற்றுவர் என்றும், அதற்கான நடைமுறை மேற் கொள்ளப்பட்டு வருவதாக வும் பிரதமர் தெரிவித்தார். [வ]

### குருநகர்...

கனவே அனுமதி வழங்கப் பட்டதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

இது விடயத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெகன் மற்றும் பிரமுகர்கள் இராணுவ அதி காரிகளுடன் பேச்சுக்கள் நடத்தியிருந்தனர்.

இம் மாதம் 8 ஆம் திகதி குருநகர்க்கடலில் மீன்பிடிக் கச் சென்ற மீனவர்களில் 11 பேர் காணாமல் போனதை அடுத்து 9 ஆம் திகதியில் இருந்து மீன்பிடிப்பதற்கான தடையை இராணுவம் விதித் திருந்தது என்பதும் குறிப் பிடத்தக்கது. (க-110-43)

### ஐ. தே. கட்சி...

பாக கலந்துரையாடலொன் றை நடத்தவுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கி ரமசிங்கா இன்றும் சபாநாய கர் அனுராபண்டாரநாயக்க எதிர் வரும் வெள்ளிக்கிழமை யும் இலண்டன் பயணமாக வுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் கருஜெயசூரியா ஏற்கனவே லண்டன் சென் றுள்ளமையும் குறிப்பிடத்தக் கது.

இந்த மூன்று முக்கிய பிர முகர்களுமே லண்டனில் அன்ரன் பாலசிங்கத்தை சந் திப்பார்களென செய்திகள் தெரிவிக்கின்றன. [ம [


ஸ்ரீசெல்வா
(யாழ்ப்பாணம்)
கமல் - ஜோதிகா
தேவயானி
நடித்த
தெனாலி
(வெட்டுப்படாத
நேரடி CD)
10.30, 2-30
[கி-688]


## பிற்போடல்

யாழ்/கொக்குவில் இந்துக் கல்லூரியின் லியோ கழ கத்தினால் 20-12-2000 அன்று அதிர்ஷ்டம் பார்க் கப்படவிருந்த சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத கார ணத்தினால் 20-01-2001 இல் அதிர்ஷ்டம் பார்க்கப் படுமென அறியத்தருகின்றோம்.

லியோ கழகம்
(2026) யாழ்/கொக்குவில் இந்துக்கல்லூரி

## பிரிவுத்துயர் பகிர்வு

கந்தசாமி ஜெயேந்திரன்

கொக்குவில் சபாபதி வீதியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி ஜெயேந்திரன் (அப்பன்) 15-12-2000 அன்று கால மானார்.

தகவல்:- விக்னஜெயம்

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.